| Publication: Dina Kural | Pg No: 4 |
|---|---|
| Edition – Print | Date – 21.09.2021 |

SEOY Award 2021 finalists

# SEOY விருது - இந்தியா 2021-க்கான இறுதிப்போட்டியாளர்கள் !

சென்னை 21, செப்டம்பர் 2021:உலக வர்த்தக மன்றத்தின் கிளை அமைப்பான ஸ்வாப் ஃபவுண்டேஷன் ஃபார் சோஷியல் ஏண்ட்ர்ப்ரொனர்ஷிப் மற்றும் ஜுபிலன்ட் பார்சியா அறக்கட்டளை, ஜுபிலன்ட் பார்சியா குழுமத்தின் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்புடன் இணைந்து 12-வது இவ்வாண்டின் சமூக தொழில்முனைவோர் (SEOY) விருது - இந்தியா 2021 விருதிற்காண இறுதிப் போட்டியாளர்களை அறிவித்தது. (SEOY) விருது - இந்தியா 2021 விருதிற்காக இறுதிப் போட்டியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றல் மிக்க சமூகத் தொழில் முனைவோர்கள் பின்வருமாறு: 1. அபர்ணா ஹெக்டே, ஆர்ம்மன்; www.armman.org , 2. சீமா பிரேம், ஃபியா குளோபல்; www.fiaglobal.com , 3. பிரன்ஷு சிங்கால், கரோ சாம்பவ்; www.karosambhav.com , 4. சுச்சின் பஜாஜ், உஜாலா சிக்னஸ்; www.ujalacygnus.com . பல்வேறு துறைகள் மற்றும் பின்னணியைச் சேர்ந்த தொழிற்துறை ஜாம்பவான்கள் மற்றும் தனித்துவம் கொண்ட பிரபலங்கள் அடங்கிய ஒரு சிறந்த நடுவர் குழு ,விருதிற்கான இறுதி வெற்றியாளரைத் தேர்ந்தெடுக்கும். 'சமூக தொழில்முனைவோர்' விருது - இந்தியா 2021 -க்கான வெற்றியாளர் அக்டோபர் 7, 2021 வியாழக்கிழமை ஒரு மெய்நிகர் விழாவில் அறிவிக்கப்படுவார். இந்த மெய்நிகர் விருது வழங்கும் விழாவில் உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு முக்கியப்பிரமுகர்கள் பங்கேற்று இந்த உத்வேகமான நபர்களின் முன்மாதிரியான பங்களிப்பைப் பாராட்டிக் கொண்டாடுவார்கள். SEOY விருது - இந்தியா, சமூக தொழில் முனைவோருக்கான மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இந்த ஆண்டு இந்த விருது தனது 12-வது ஆண்டைக் கொண்டாடுகிறது. 2010 ஆம் ஆண்டில், சமூக தொழில்முனைவிற்கான ஸ்வாப் ஃபவுண்டேஷன் ஃபார் சோஷியல் ஏண்ட்ர்ப்ரொனர்ஷிப் மற்றும் ஜுபிலன்ட் பார்சியா அறக்கட்டளை ஒன்றிணைந்தது இந்தியாவில் 'இவ்வாண்டின் சமூக தொழில்முனைவோர் (SEOY) - இந்தியா விருது'-ன் மூலம் சமூகப் புத்தாக்கத்தைப் பெறுமைப்படுத்த முன்வந்தது.